**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.67/2018**

2026=ம் ஆண்டு மார்ச் மாதம் 17ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**D.W.3 சேட்டு, வயது 45, த/பெ சுப்பிரமணி**

**குறுக்கு விசாரணை (வாதிகள் தரப்பு)**

**நேரம் - 12.16**

இ.ம.144/2018 மனு தாக்கல் செய்து அதில் வழக்கறிஞர் ஆணையர் நியமித்து சர்வேயர் மற்றும் ஆணையருடன் தாவா இடத்தை பார்வையிட அனுமதிக்கப்பட்டு சர்வேயர் மற்றும் ஆணையர் தாவா இடத்தை பார்வையிட்டு ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், அது நீ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நீ.ம.சா.ஆ.3 ல் சர்வே எண்.367/1 க்குட்பட்ட புல வரைபடத்தை நான் நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ளேன் என்றால் சரிதான். புல எண்.367/1சி என்பது சர்வே எண்.367/1ன் உட்பிரிவு என்றால் சரிதான். புல எண்.367/1சி கிழக்கு ஜக்பந்தியாக சர்வே எண்.367/1இ உள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி சர்வே எண்.367/1இ என்பது அடங்கல் ஆவணப்படி ஆறுமுகம் என்பவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். புல எண்.367/1டி கிழக்கு ஜக்பந்தியாக யார் பெயரில் உள்ளது என்றால் பார்குணன் என்பவர் பெயரில் உள்ளது. பர்குணன் என்பவர் நாராயணன் என்பவரின் மகன் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.367/1டி பர்குணன் பெயரில் வருவதற்கு முன்பாக அவர் தந்தை நாராயணன் பெயரில் வந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதேப்போல் 367/1சி தெற்கு ஜக்பந்தியாக பொதுவழி மண்பாதை உள்ளது என்றால் சரிதான். அதேப்போல் 367/1சி கிழக்கு ஜக்பந்தியாக 339/8ஏ உள்ளது என்றால் சரியல்ல, 339 உள்ளது. மேற்படி 339 உட்பிரிவு செய்யப்பட்டுள்ள விவரம்

எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்.339 என்பது உட்பிரிவு செய்யப்பட்டு 339/ 8ஏ என்பது தேவகியம்மாள் பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

3. சர்வே எண் 367/1சிக்கு மேற்கு ஜக்பந்தியாக 367/1பி உள்ளது என்றால் சரிதான். மேற்படி 367/1பி யார் பெயரில் உள்ளது என்றால் அ பதிவேட்டில் சரவணன் பெயரிலும், அடங்களில் இளமாறன் பெயரில் உள்ளது. அதேப்போல் 367/1சி ஆனது மேலே சொன்ன 4 எல்லைக்குட்பட்ட சர்வே எண்களுக்குள் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.367/1 உட்பிரிவு செய்வதற்கு முன்னர் சர்வே எண்.367/1 ஜக்பந்தியில் உள்ள நிலங்களை வாதியானவர் ஆரோக்கியசாமி வகையறாவிடமிருந்து 1986 மற்றும் 1992 வருடங்களில் கிரையம் பெற்றுள்ளார் என்றால் மேற்படி விவரம் எனக்கு தெரியாது. அவ்வாறு கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தில் சர்வே எண்.367/1ஏ என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

4. மேற்படி தவறான சர்வே எண்.367/1ஏ குறிப்பிட்டுள்ளதால் வாதி பெயரில் பட்டா மாற்றம் செய்யப்படவில்லை என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் எந்த ஆவணங்களை சரி பார்த்து அடங்கல் வழங்குவோம் என்றால் பட்டாவை சரி பார்த்துதான் அடங்கல் வழங்கப்படும். சர்வே எண்.367/1பி அ பதிவேடு பட்டா படி சரவணன் பெயரில் உள்ளது என்றாலும், ஆனால் அடங்கல் இளமாறன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். ஆகையால் எங்கள் வசதிக்கேற்ப ஆவணங்களை சரி பார்க்காமல் யார் நிலத்தில் அனுபவத்தில் உள்ளார் என்பதை சரி பார்க்காமல் பெயர்களை ஆவணங்களில் குறிப்பிடுவோம் என்றால் தவறுதான், எப்போதும் ஆவணங்களை சரி பார்த்துதான் வழங்குவோம்.

5. சர்வே எண்.367/1சி ஆனது வாதி ஆறுமுகத்திற்கு சொந்தமான நிலம் மற்றும் வாதி அனுபவத்தில் உள்ளது என்றாலும், ஆனால் நாங்கள் தவறுதலாக சரவணன் பெயரில் பட்டா வழங்கிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது.**

**நேரம் - 12.45.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-D.V.Koperundevi
District Munsif,
Arni